2018 ஜனவரி 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

6—

வர்த்தக மையம்

***18960—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் வர்த்தக மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்பகோணம் பகுதியில் வர்த்தக மையம் அமைக்கும் திட்டம் தற்போது அரசு வசம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* மலை குலைந்தாலும், நிலை குலையாத, இந்தியத் திருநாட்டில் பல்வேறு பாரதப் பிரதமர்கள், மாண்புமிகு ஜவஹர்லால் நேரு முதல் இன்றைய பாரதப் பிரதமர் நரேந்திர மோடி வரை சந்தித்த ஒரே தலைவர், எங்கள் தானைத் தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) எறும்பைவிட சுறுசுறுப்பாக ஓடி, ஓடி உழைத்து எங்கள் கழகத்தை வழி நடத்தும் தங்கமாகத் திகழும் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்க கால சோழர்களுடைய காலத்தில் நிதி சேமிப்புக் கிடங்காக, செல்வக் கருவூலமாக, 2000 ஆண்டுகளுக்கு முன்பு பொருளாதார மையமாக குடந்தை விளங்கியதாக குடவாயிற் கீர்த்தனார் புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்கள். உலகப் பிரசித்திபெற்ற தொன்மையானதும், பாரம்பரியமிக்கதும், வேறு எங்கும் உற்பத்தி செய்யப்படாத பொருட்களைத் தன்னகத்தே கொண்டதுமான கும்பகோணத்தில், வெற்றிலை முதல் வெங்கலச் சிலை வரை, அதுபோன்று நெட்டித் தொழில் முதல் பட்டுப் புடவை நெய்வது வரை, பித்தளை முதல் செம்பு, எவர்சில்வர் பாத்திரம் முதல் கார்த்திகை அகல் விளக்கு முதல் தைப் பொங்கல் பானை செய்வது வரை, கும்பகோணத்திற்கு மெருகேற்றக்கூடிய, கும்பகோணம் என்று சொன்னால், டிகிரி காபி நினைவுக்கு வருவதுபோல், அறுசுவை உணவு வகை (குறுக்கீடு) அது மறைந்துபோய்விட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் துணைக் கேள்வியை 10–44 மணிக்கு ஆரம்பித்தீர்கள். நேரம் போய் கொண்டே இருக்கிறது.*

திரு. க. அன்பழகன்: *இப்போதுதான் எனக்கு முதல் கேள்வி. எனக்கு இது* main *கேள்வி.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.*

திரு. க. அன்பழகன்: *பல்வேறு வகைகளிலும் அடையாளச் சின்னமாக கும்பகோணம் விளங்குகிறது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *கேள்வியைச் சீக்கிரம் கேட்டு முடியுங்கள்.*

திரு. க. அன்பழகன்: *உலகின் பல்வேறு நாடுகளில் உள்ளவர்களின் கவனத்தை ஈர்த்து, தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சுற்றுலாப் பயணிகளாக வருகைதரும் கோயில் நகரமாக விளங்குவது கும்பகோணம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் உங்களுடைய பயணத்தை முடித்து, கேள்வியைக் கேட்டு முடியுங்கள்.*

2018 ஜனவரி 9]

திரு. க. அன்பழகன்: *வருகிறேன், வருகிறேன். அவர்களுக்குப் பயனளிக்கின்ற வகையிலும், இங்குள்ள விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், கைவினைஞர்கள் பயன்பெறும் வகையிலும், கும்பகோணத்தை வர்த்தக மையமாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு வர்த்தக மையம் அமைக்கப்பட வேண்டுமென்றால், அங்கு* Trade promotional activities *தொடர்ந்து இருக்க வேண்டும்; வர்த்தகம் தொடர்பான செயல்பாடுகள் நிறைந்து இருக்க வேண்டும். மேலும், பெரிய தொழிற்சாலைகள் உள்ள பகுதிகளில்தான்* Trade Centre – *வர்த்தக மையம் அமைக்கப்படும். வர்த்தக மையத்தைப் பொறுத்தவரையில், கட்டண அடிப்படையில் செயல்படுவதால், அதனைப் பெரிய நிறுவனங்கள் அமைந்துள்ள பகுதிகளில் ஏற்படுத்தினால்தான் தொடர்ந்து செயல்படுத்த முடியும். மேலும், வர்த்தக மையம் நிறுவுகின்ற பகுதியில் நல்ல சாலைகள் இருக்க வேண்டும்; இருப்புப் பாதை இருக்க வேண்டும்; துறைமுகம் இருக்க வேண்டும்; விமானப் போக்குவரத்து வசதி இருக்க வேண்டும். இந்த வசதிகள் இல்லாத கும்பகோணம் பகுதியில் வர்த்தக மையம் அமைப்பது என்பது இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: ** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பகுதியில், குறிப்பிட்ட ஊர்களில் தனித் தன்மை கொண்ட, தனிச் சிறப்புமிக்க ஊரின் அடையாளமாக விளங்குகின்ற பொருட்களுக்கு மத்திய அரசால் புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது.*

** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், கேள்வியைக் கேட்டு முடியுங்கள். ஏற்கெனவே பல முறை "முதல், முதல்" என்று சொல்லி, பல கேள்விகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். கேட்டு முடியுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. க. அன்பழகன்: நான் கேள்வி கேட்கிறேன். எப்போது பார்த்தாலும் நீங்களும், நானும்தான் வருகிறோம். நான் பேசும்போது சபாநாயகர் இருப்பதில்லை; துணை சபாநாயகர்தான் வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள். சென்ற முறை நான் பேசும்போதும் இப்படித்தான் நடந்தது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, ** என்று சொன்னார். அது அவைக் குறிப்பில் இருப்பது சரியாக இருக்காது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் துணைக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: துணைக் கேள்விக்கு வாருங்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் ** என்று சொன்னதைத்தான் சொன்னேனேயொழிய, அவர் ** என்று சொல்லவில்லையே? அதில் ஒன்றும் தவறு இல்லையே? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் துணைக் கேள்விக்கு வாருங்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜனவரி 9]

முற்பகல் 10–50

திரு. க. அன்பழகன்: *மத்திய அரசால் புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் உலக அளவில் சிறப்பு பெற்ற கும்பகோணம் பகுதி மற்றும் சுவாமிமலையில் பஞ்சலோக சிற்பச் சாலைகளில் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் வகையில் வடிவமைக்கப்படும் சிற்பங்களுக்குப் புவிசார் குறியீடு வழங்கப்பட்டிருக்கின்றது. அதுபோல், கும்பகோணம் மற்றும் நாச்சியார்கோயிலில், அலுவலகங்கள் முதல் ஆலயங்கள் வரை அழகுபடுத்தப்படுகின்றன. பித்தளைக் குத்துவிளக்குகள், கோபுர கலசங்கள், திருவாச்சிகள் வார்த்து எடுக்கப்படுகின்றன. பெரிய பெரிய குத்துவிளக்குகளுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டிருக்கிறது. கண்களைப் பறிக்கின்ற, பாரம்பரியம் மிக்க வண்ணப் பட்டாடைகள் உற்பத்தி செய்கின்ற திருப்புவனம், தாராசுரம், பட்டீஸ்வரம், அம்மாசத்திரம் போன்ற பகுதிகளின் மையமாக கும்பகோணம் உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், பேசியது போதும். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள்.* (குறுக்கீடு)

திரு. க. அன்பழகன்: *ஒரு நிமிடம் இருங்கள். இங்கு பல்லாயிரக்கணக்கான நெசவாளர்கள் நேர்த்தியாக, நவீன வேலைப்பாடுகளுடன் பட்டுப் புடவைகள் நெய்கின்றனர். காவேரி டெல்டா பகுதி விவசாயிகள் தாங்கள் விளைவித்த வேளாண் விளைபொருட்களான நெல், கரும்பு, காய்கறிகள், தானியங்கள் போன்றவற்றைச் சந்தைப்படுத்தும் மையமாகவும் கும்பகோணம் இருக்கிறது. இவற்றை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள், நெசவாளர்கள், கைவினைஞர்கள். . .*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சொல்லி முடியுங்கள்.* (குறுக்கீடு) *இப்படியா துணைக் கேள்வி கேட்பது?*

திரு. க. அன்பழகன்: *ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். தொழிலாளர்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். பாரம்பரியமிக்க இந்தத் தொழில்கள் அழியாமல் காப்பாற்றப்பட, அவர்களின் வாரிசுகள் தொடர்ந்து தொழில் செய்திட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புவிசார் குறியீடு பற்றிக் குறிப்பிட்டார்கள். கலை மற்றும் பண்பாட்டுத் துறை சார்பாக நிறைய பொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. மேலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பொருட்களுக்குண்டான புவிசார் குறியீடுகளைப் பெற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, அதை நிறைவேற்றித் தருவதற்கு ஆய்வு செய்யப்படும் என்பதைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். மேலும், வெண்கல, பித்தளைப் பொருட்கள் உற்பத்தியில் தொழிலாளர்களுடைய பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். Small Scale Industries சம்பந்தப்பட்ட விஷயம் அது. மாண்புமிகு Rural Industries Minister அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, இந்தக் குறைகளைத் தீர்ப்பதற்கு இந்த அரசு ஆலோசனை செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல் அவர்கள்.

திரு. எ.பி. சக்திவேல்: மண்ணைவிட்டு மறைந்தாலும் மக்கள் மனதைவிட்டு மறையாமல் நீக்கமற நிலைத்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா ஆகிய இருபெரும் தலைவர்களின் தாள்பணிந்து வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லரசை தலைமையேற்று வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கின்ற மாட்சிமை பொருந்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகர், ஜவுளித் தொழில் மற்றும் சாயப் பட்டறைத் தொழில் மற்றும் மர வேலை, உலோக வேலை உள்ளிட்ட அனைத்து வேலைகளும் சார்ந்த பிரதான தொழில் நகரமாக இருந்துகொண்டிருக்கிறது. சேலம் மாநகரில் இருப்புப் பாதை வசதி மற்றும் விரைவிலேயே

2018 ஜனவரி 9]
விமானப் போக்குவரத்து வசதியும் வரவிருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சேலம் மாநகரில் ஒரு வர்த்தக மையம் அமைத்துத் தர ஆவன செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது கோயம்புத்தூரில்* CODISSIA, *மதுரையில்* MADITSSIA, *திருச்சியில்* TANSTIA *போன்ற வர்த்தக நிறுவனங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. அதேபோல், சேலம் மாநகருக்கு உட்பட்ட தொழில் நிறுவனங்கள், தொழில் முனைவோர்கள் அனைவரும் இணைந்து வர்த்தக மையம் அமைக்கும் திட்டத்திற்குச் செயற்குறிப்புகள் மற்றும் தேவையான நிதியாதாரங்களுடன் முன்வந்தால்,* TIDCO *மூலமாக அவர்களுடன் இணைந்து, சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, இந்த அரசு செய்து கொடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

7—

மின்னணு குடும்ப அட்டை

***22637—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்னணு குடும்ப அட்டைகளில் குடும்ப உறுப்பினர்களின் புகைப்படத்தை அச்சிட்டு வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?